நூலகம்
கொழும்பு தமிழ்ச்சங்க

உ
சிவமயம்

# மும்முனைக் கவசம்







- விநாயகர் அகவல்
- கந்த சஷ்டி கவசம்
- சனிபகவான் ஸ்தோத்திரம்

தொகுப்பாக்கம்
திரு. ஆறுமுகம் - அரசரெத்தினம்

வெளியீடு:
திருவருள் நூல் வெளியீட்டுக் குழு
களுதாவளை.

நியூ கீன் - மட்டக்களப்பு

உ
சிவமயம்


1. நூற்பெயர் : முமுனைக் கவசம்
2. தொகுப்பு ஆக்கம் : திரு.ஆறுமுகம் அரசரெத்தினம்
3. முகவரி : வாகரையார் வீதி, களுதாவளை - 01, களுவாஞ்சிகுடி.
4. வெளியீடு : திருவருள் நூல் வெளியீட்டுக் குழு களுதாவளை.
5. தொலைபேசி இல : 065 - 2250306
6. அச்சுரிமை : திருவருள் நூல் வெளியீட்டுக் குழு
7. அச்சகம் : நியூ கீன்
8. முகவரி : இல.73 முனை வீதி, மட்டக்களப்பு. T.P. 065 - 2222204
9. அளவு, பக்கம் : 1/8 iii + 17
10. பிரதிகள் : 1000
11. வகை : சிற்றிலக்கியம்
12. மொழி : தமிழ்


## அன்புடன் அழைக்கின்றோம்

சிவபதமடைந்தவர்களின் நினைவாக வழங்கப்பட்ட நிதியுதவி இந்நூல் அச்சில் வெளிவருவதற்கு அனுசரணையாயிற்று நினைவு கூரப்படுபவர்களின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். நூல் வெளியிடும் முயற்சியில் தொடர்ந்தும் செயற்படவுள்ளோம். இதற்காக களுவாஞ்சிகுடி மக்கள் வங்கியில் 2-085147-5ஆம் இலக்க சேமிப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இந்த நூல் வெளியீட்டுடன் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விபரங்களை அறிந்து இம் முயற்சியில் எம்மோடு இணைந்து கொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

களுதாவளை,
களுவாஞ்சிகுடி.
09.06.2005

திருவருள் நூல் வெளியீட்டுக் குழு

உ
சிவமயம்

**சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் (பிரதம குரு)**
**மட்/ களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயம்**

## ஆசியுரை

இறைவன் அருளில் கலந்த பாடல்களால் அடியார்கள் உடனுக்குடன் கைமேற் பலனடையப் பெற்றுள்ளனர். அந்த வகையில் ஔவையாரினால் பாடப்பட்ட விநாயகர் அகவல், தேவராய சுவாமிகளால் பாடப்பட்ட கந்த சஷ்டி கவசம் ஆகியவைகள் உடனுக்குடன் பலனளிக்கும் பாமாலைகள். சனிபகவான் ஒவ்வொருவருக்கும் ஏழரைச் சனி, நஞ்சச் சனி, அட்டமத்துச் சனியாக ஆதிக்கம் செய்யும் போதும் ஏனைய நாட்களிலும் பாடி வழிபாடு செய்து பயன்படக் கூடிய வகையில் சனிபகவான் தோத்திரம் இயற்றப் பட்டுள்ளது. பொதுவாக புரட்டாதி சனி வாரத்தில் ஆலயங்களில் விசேட வழிபாடுகளின் போது சனி பகவானின் பாமாலைபாடி வழிபடுவது வழக்கமாகவும், கண்டிப்பாகவும் நடைபெறுகின்றது. விநாயகப் பெருமான், முருகப்பெருமான், சனீஸ்வரன் ஆகிய தெய்வ வழிபாட்டுக்குகந்த பாமாலைகள் ஒருங்கிணைந்து மும்முனைக்கவசம் என்ற பெயரில் நூலாக வெளிவருவது அடியார்களுக்கு மிக வசதியாக அமைகின்றது. இந்நூல் ஒவ்வொருவர் கைவசமும் இருந்து நாள் தோறும் பாராயணம் செய்து வந்தால் அதன் பயன் அவரவர் வாழ்க்கையில் விரைவில் கைமேல் பலனாக கிடைக்கும் என்பதில் ஐயமில்லை வெண்மணலெங்கும் வெற்றிலையும் விளைநிலம் எங்கும் செந்நெல்லும் கன்னல், கமுகு, கதலி, பலா, மா, மேட்டு நிலப் பயிர்கள் என்பன செழித்தோங்கும் களுதாவளைப் பதியில் வாழ்கின்ற இந்நூலாசிரியர் அடியார்களுக்கு அத்தியாவசிய தேவைக்குகந்த நவரசக் கதம்ப மாலை, கேதார கௌரி விரதம், திருப்பொன்னூஞ்சல், பிள்ளையார் கதை ஆகிய நூல்களை மிக எளிமையாக வெளியிட்டுள்ளார். ஆகவே இவரின் இப்பணி மென்மேலும் வளர்ச்சியடைந்து மக்களுக்கு பயன்பட எல்லாம் வல்ல களுதாவளைச் சுயம்புலிங்கப் பிள்ளையாரின் நல்லாசி வேண்டி நிற்கின்றேன்.

*இப்படிக்கு,*

27.04.2005

சிவஸ்ரீ .மு.கு. சச்சிதானந்தக் குருக்கள்.

உ

சிவமயம்

**சிவத்திரு.வே.கு.சபாநாயகம் குருக்கள் (பிரதம குரு)**

**மட்/ களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம்**

## வாழ்த்துரை

**பா**லும் தேனும் கலந்த சுவைபோல் தமிழ் மணமும் சைவ மணமும் தென்றலென தவழ்கின்ற மட்டுமா நகரின் தென்பால் நீர் வளமும் நிலவளமும், செந்நெல்வயல் வளமும் வெற்றிலையின் பெருவளமும் சேர இயற்கை அழகுடன் விளங்கும் களுதாவளைப் பதியின் கண் சுயம்பு லிங்கப் பிள்ளையாரினதும், சிவசத்தி ஸ்ரீ முருகப் பெருமானினதும் நல்லருள் கொண்டு திரு. ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியருக்கு புதல்வராய் வந்துதித்து இறை உணர்வோடு வாழ்கின்ற திரு. அரசரெத்தினம் அவர்கள் சுயநலம் கருதாது தான் பெற்ற இறை இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மனத்துடிப்போடு அல்லும் பகலும் அயராது தெய்வத்தின் பெரும் கருணையை எண்ணி இவ்வரிய மானிட பிறவியைத் தந்த கருணைக் கடலே உனக்கு நான் என்ன கைமாறு செய்வேனோ என மனம் கசிந்து தனது பத்தி உணர்வால் இறைவனைப் போற்றி பல பாடல்களை இயற்றி நூலாக வடித்திருக்கின்றார். அதனோடு இந்நூலையும் வெளியிடுகின்றார். விநாயகர் அகவலையும், கந்தசஷ்டி கவசத்தையும், சனிபகவான் தோத்திரத்தையும் மக்களின் தேவை கருதி ''மும்முனைக் கவசம்'' என்ற நூலாக வெளியிடுகின்றார். இவரால் இயற்றப்பட்ட காப்புச் செய்யுள்ளோடு கூடிய பன்னிரண்டு சனிபகவான் தோத்திரப் பாடல்கள் முன்னைய பாடல்களோடு சரிநிகர் சமானமாக நின்று தொட்ட குறை விட்டகுறை நிரப்பி நிற்பது கண்டு வாழ்த்துகிறேன். ஆன்மார்த்த நிலையிலும், பரார்த்த நிலையிலும் இறைவனை வழிபடுவோர்க்கு இந்நூல் அருமையானது எனமன மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலைப் பெற்று பொருளுணர்ந்து பாராயணஞ் செய்து இறையருள் பெறுவீர்களாக !.

**இறையருள் என்றும்**

**இப்படிக்கு,**

**27.04.2005** **சிவத்திரு. வே.கு. சபாநாயகம் குருக்கள்**



உ

சிவமயம்

## வெளியீட்டுரை

*வே*ழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும். எக்கருமம் தொட்டாலும் இதமாய் முடிவதற்கு விக்கினத்து நாயகரை முதலில் வணங்குதல் வேண்டும். தும்பிக்கை நாதனை நம்பிக்கையோடு நாள்தோறும் வழிபட்டு பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலுங் கலந்து கொடுத்து இயல், இசை , நாடகம் என்ற முத்தமிழையும் விநாயகரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஔவையாரை தும்பிக்கையாலே தூக்கி கைலாயம் சேர்த்தவர் பிள்ளையார். விநாயகரின் அழகுத் திருக்கோலம் கண்ட ஔவையார் பாடியது விநாயகர் அகவல். இன்று கலியுக காலம். கலியுக வரதன் கந்தன். தேவசேனாதிபதியாகி சூரசங்காரம் செய்து தீமையிலிருந்தும் அழிவிலிருந்தும் காப்பாற்றியவர் கந்தப் பெருமான். அவரது விரதங்களுள் கந்தசஷ்டி விரதம் முதன்மையானது தமிழாசிரியரான தேவராய சுவாமிகள் பாடிய கந்த சஷ்டி கவசம் பெருமளவில் பாராயணம் பண்ணப்பட்டு வருகின்றது. நவக் கிரகங்களுள் சனிபகவான் வலிமை பெற்ற கிரகம். சூரிய பகவானின் மகனான சனிபகவான் ஏழரைச் சனி, மாரகச் சனி, மங்குசனி என்று கெடுப்பதிலும் பொங்கு சனியாக வந்து கொடுப்பதிலும் வல்லபர்.

உலகில் பெய்கின்ற மழையையும் எறிக்கின்ற வெய்யிலையும் தடுக்க முடியாவிட்டாலும் சிறிய தழப்பத்து , குடை என்பவற்றின் மூலம் நம்மை பாதுகாக்க முடியும். பாதரட்சை மூலம் கல்லும் முள்ளும் குத்தாது கால்களை காப்பாற்றலாம். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகவும், கண்ணுக்கு வந்தது கண்ணிமையோடு போகவும், மலைப்போல் வந்தது பனிப்போல் போகவும் பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் உதவும். அகவல், கவசம் என்பவற்றின் மூலம் கடவுள் அருள்பெற்று சனிபகவான் தோத்திரத்தால் கேடுகளை குறைக்கலாம் என்று நம்பி காலத்தின் தேவை கருதி இந்நூலை வெளியிடுகின்றோம். நவரசக் கதம்ப மாலை தொகுதி i, தொகுதி - ii, தொகுதி - iii, திருப்பொன்னூஞ்சல், கேதார கௌரி விரதம், பிள்ளையார் கதை ஆகிய நூல்களை வெளியிட்ட நாம் ஏழாவது நூலாக மும்முனைக் கவசம் என்ற நூலை வெளியிடுவதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

**திருவருள் நூல் வெளியீட்டுக் குழு,**
**களுதாவளை.**

**09.06.2005**

உ
சிவமயம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரி நூற் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு (து) என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்கு தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து



குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணையில் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இரு வினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டமு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்

உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்கு
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக் கொன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள் வழி காட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே



உ
சிவமயம்

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்த
சஷ்டி கவசந்தனை அமரரிடர்தீர அமரம் புரிந்த குமரனடி
நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார் சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார் கையில்வேலால் எனைக்காக்க என்றுவந்து
வரவர வேலா யுதனார் வருக வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறு முகம் படைத்த ஐயா வருக நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம நிபவ சரஹண நிற நிற நிறென
வசர ஹணபவ வருக வருக அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னையாளும் இளையோன் கையில் பன்னிரண் டாயுதம் பாசாஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க விரைந்தெனைக் காக்கவேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும் உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும் நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளியொவ்வும் குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும் நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ்வாயும் நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண்டலமும் ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும் செப்பழ குடைய திருவயிறு உந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும் நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும் திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச்செல்வ மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும் லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதிஎன்றெண்ணும் என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க பொடிபுனை நெற்றியைப்புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க விரிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல்காக்க என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக்காக்க பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங்கயிற்றை நல்வேல் காக்க ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க வட்டக்குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல்காக்க எப்பொழு தும்எனை எதிர்வேல்காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம் கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க! அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும் பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும் பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்



அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும் கனபூசை கொள்ளும் காளியொடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும் தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
உன்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும் நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன் மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும் காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும் அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால் கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக் கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத் தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம் ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும் வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங்குன்மம் சொக்குச் சிரங்கு குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை கடுவன் படுவன் கைத்தாள்சிலந்தி
பற்குத்து அரணை பருஅரையாப்பும் எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய் ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா மண்ணாள் அரசரும் மகிந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம் சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகலொளி பவனே பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை காத்துத் தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே கார்த்திகை மைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருக பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா செந்தில் மாமலையுறும்செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என் நாவிருக்கயான் உனைப்பாட எனைத்தொடர்ந்திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப் பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார் சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன் வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள் எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குருபொறுப்பது உன்கடன் பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையொன் றன்பாய்ப்பிரியம் அளித்து மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்தருளிச்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய் கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக் காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச் சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக் கொண்டு ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த் திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்
கருளுவர்
மாற்றலர் எல்லாம்வந்து வணங்குவர் நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர் எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள் பொல்லா தவரை பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும் சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலஷ் சுமிகளில் வீர லஷ்மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால் இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும் சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம் மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம் சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



உ
சிவமயம்

# சனிபகவான் ஸ்தோத்திரம்
## கணபதி காப்பு

ஓங்காரத் திருவுருவே உமை சிவனின் முதன் மகனே
தீங்ககற்றிக் காக்கின்ற சித்தி விநாயகரே - பாங்குடனே
கதிர் மகனாம் சனிபகவான் கதை புகல நீ எனக்கு
எதிர் வந்து நின்னருளைத் தா

நெருங்கிடு பிணியெலாம் நீங்கு நோன்மையும்
ஒருங்கு மொய்ம்பு இரண்டும் ஆங்குறும் கருந்துகில்
மருங்கிலும் கழுகிவர் வனப்புங் கொண்டு அமர்
அருங்கதிர் மதலை தாழ் அன்போடு ஏத்துவாம்

மறுவறும் எனது சென்னி வளர் புகழ் சனி புரக்க
பெறுமுகம் அன்பர் அன்பன் பேணுக செவி கறுக்கும்
அறுவை நன்கு அணிவோன் காக்க அச்சமே விளைக்கும் மெய்யோன்
நறுமலர் விழி புரக்க நாசிகைகாரி காக்க

கருங்களம் உடையதேவன் கவின்படு கண்டம் காக்க
பெருங்கவின் படுபுயத்தோன் பெருவரைப் புயம் புரக்க
வருங்கை நீலோற்பலம் போ(ல) வளர் ஒளி அண்ணல் காக்க
ஒருங்குறும் எனது நெஞ்சம் உடல் கரியவன் புரக்க

சுந்தரம் தழுவும் உந்தி சூட்கமாம் வயிற்றோன் காக்க
சந்தமார் விகடம் செய்வோன் தடம்படு கடி புரக்க
நந்திய கோரரூபன் நற்றொடை புரக்க நாளும்
முந்துற நெடியரூபன் மொழிதரு முழந்தாழ் காக்க

மங்கலம் ஈயும் ஈசன் வனப்புறு கணைக்கால் காக்க
தங்குறு பரடு இரண்டும் தகுகுணாகரன் புரக்க
பங்கெனப் படுவோன் பாதம் பழுதறப் புரக்க பார்மேல்
செங்கதிர் அளிக்கும் மைந்தன் திருந்துமென் அங்கம் காக்க

நன்றி தருசனிகவசம் நாள்தோறும் அன்பினொடு நவின்று போற்றி
வென்றி தரும் விறல் உதவும் புகழ் அளிக்கும் பெருவாழ்வு
மேவ நல்கும்
கன்றுபவத் துயர் ஒழிக்கும் வினை ஒழிக்கும் பிணி ஒழிக்கும் கவலை
போக்கும்
அன்றியும் உள்நினைந்தவெலாம் அங்கை நெல்லியம் கனியாம்
- அவனியோர்க்கே

அஞ்சுவணம் முதலவற்றில் அமைக்கும் இயந்திரம் எள்ளு அமர
வைத்து
வருஞ்சுகந்த மலராதித்து அரியவற்றால் பூசித்து மனுப்புகன்று
பெருஞ்சுகம் கொண்டிட விழைவோன் கருந்துகிலோடு அந்தணர்க்கு
பெட்பின் ஈயில்
கருஞ்சனி உள் மகிழ்ந்துறு நோய் களைந்து நலம் முழுதும்
உளங்கனிந்தே நல்கும்

ஆங்கதனோடு அரும்பொருளும் மற்றவனுக்கு அளிப்பன் எனில்
- அவனுக்கு என்றும்
தீங்கு அகல மேன்மேலும் பெருகி எழுவாழ் நாளும் செல்வப் பேறும்
ஓங்கு மனை மக்கள் முதல் பற்பல சுற்றப்பொலிவும் உதவும்
காண்பீர்
வாங்கு கடல் முளைத்திருள் நீத்தெழும் கதிரோன் அன்று உதவ
வந்த மைந்தன்.



## காப்பு (வெண்பா)

தேவரெண்டிசைக் கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதை புகலக்
காரணிந்த யானை முகன் காப்பு

ஆதி வேதாந்த முதலறிய ஞான
ஐந்தெழுத்தினுட் பொருளை அயன் மாலோடும்
சோதி சிற்றம்பலத்திலாடி நின்ற
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே
பாதிமதி சடைக்கணிய அரவம் பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடியாடிச்
சாதியில்லா வேடனெச்சில் உண்ண வைத்தாய் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

வேலவனை வேங்கை மரமாக்கி வைத்தாய்
விறகு கட்டிச் சொக்கர்தமை விற்க வைத்தாய்
மாலவனை உரலோடு கட்டு வித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்
காலனை மார்க்கண்டனுக்காக அரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே
சாலவுனை நான் தொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

மஞ்சு தவழ் அயோத்தியில் வாழ் தசரதன் தன்
மக்களையும் வனவாசமாக்கி வைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதி இழந்து
பஞ்சுபடும் பாடைவர் படச் செய்வித்தாய்
எஞ்சலிலா அரிச்சந்திரன் பெண்டை விற்றே
இழி குலத்தில் அடிமையுற இசைய வைத்தாய்
தஞ்சமென உனைப் பணிந்தேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டம் ஆயிரத்தெட்டு அரசு செய்த
அடல் சூர பத்மனையும் அடக்கி வைத்தாய்
மண்டலத்தை ஆண்ட நளச் சக்கரவர்த்தி
மனைவியோடு வனமதனில் அலையச் செய்தாய்
விண்டலத்தை பானு கோபன் தன்னாலே
வெந்தணலால் சூரரையும் வெருவச் செய்தாய்
தெண்டனிட்டேன் எந்நாளும் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டர் கோன் மேனியிற் கண்ணாக்கி வைத்தாய்
அயன் சிரத்தை வைரவனால் அறுக்க வைத்தாய்
திண்டிறல் கொள் கௌதமன் அகலிகை தான்
சிலையாகவே சாபமுறவே செய்தாய்
தண்டரள நகையிரதி மாறன் தன்னைச்
சங்கரனார் நுதல் விழியால் தணல் செய்வித்தாய்
துண்டமிலாதுனைத் தொழுதேன் எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

பாருலவு பரிதியைப் பல்லுதிர வைத்தாய்
பஞ்சவர்க்கு தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருலவு வாலி சுக்கிரீபன் தம்மைத்
தாரையினால் தீராத சமர் செய்வித்தாய்
சூரனென்னும் இலங்கை இராவணன் தங்கை
சூர்ப்பனகை மூக்கு முலை துண்டு செய்வித்தாய்
தாரணியும் மணிமார்பா எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

சுக்கிரன் தன் கண்ணிழந்தான் இலங்கையாண்ட
துலங்கு இராவணன் சிரங்கண்டிக்க வீழ்ந்தான்
மிக்க புகழ் இரணியன்தான் வீறழிந்தான்
விளங்கு திரிபுராதிகளும் வெந்து மாண்டார்
சக்கரத்தால் உடலறுந்தான் சலந்தரந்தான்
தாருகா சூரனுமே சமரில் மாண்டான்
தக்கன் மிகச்சிரமிழந்தான் நின் தோஷத்தாலே எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே



அந்தமுள ஐங்கரன் கொம்பறவே செய்தாய்
அறுமுனிவர் மனைவிகள் கற்பழியச் செய்தாய்
சந்திரன் தன் கலையிழந்து தழைக்கச் செய்தாய்
சங்கரனைப் பிச்சைதான் எடுக்கச் செய்தாய்
தந்திமுக சூரனுயிர் தளரச் செய்தாய்
சாரங்க தரன் கரத்தைத் தறிக்கச் செய்தாய்
சந்ததமும் உனைப் பணிவேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

சீதைதனை இராவணனால் சிறை செய்வித்தாய்
தேவர்களைச் சூரனால் சிறை செய்வித்தாய்
மாது துரோபதை துயிலை வாங்கு வித்தாய்
மகேஸ்வரனை உமைபிரியும் வகை செய்வித்தாய்
போதிலயன் தாளிற்தளை பூட்டுவித்தாய்
பொதிகையினில் அகத்தியனை பொருந்தச் செய்தாய்
தாது சேர் மலர் மார்பா எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அப்பர் தமை கருங்கல்லோடு அலையில் சேர்த்தாய்
அரனடியில் முயலகனை அடங்கச் செய்தாய்
செப்பு மாணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஸ்ரீராமனை மச்சவுரு எடுக்கச் செய்தாய்
ஒப்பிலா அனுமன் வாலிலொளி தீயிட்டாய்
ஒலி கடலின் நஞ்சை அரன் உண்ண வைத்தாய்
தப்பில்லாதுனைத் தொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

நீரினை உண்டெழு மேகவண்ணா போற்றி
நெடுந்தவத்தில் அறுகமலக் கண்ணா போற்றி
சூரியன் தன் தவத்தில் வந்த பாலா போற்றி
துலங்கு நவக்கிரக துண் மேலா போற்றி
காரியேன் அன்பர்கள் உபகாரா போற்றி
காசினியிற் கீர்த்தி பெற்ற தீரா போற்றி
மூரி கொளு நோய் மகமாமுடவா போற்றி
முது மகனின் முண்டகத்தாழ் போற்றி போற்றி

சூரியன் சோமன் செவ்வாய்
சொற் புதன் வியாழன் வெள்ளி
காரியனி இராகு கேது
கடவுள ஒன்பா நாமத் தீ
தாருயச் சக்கரத்தை
தரித்திரர் பூசித்தாலும்
பாரினில் புத்திரருண்டாம்
பாக்கியம் நல்குந்தானே.

சங்கடந் தீர்க்கும் சனிபகவானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருளும்
சச்சரவின்றி சகா நெறியில்
இச் செகம் வாழ இன்னருள் தா தா

## காப்பு

உள்ளம் உணர்வு உயிர் யாவும் உனக்காக்கி
பள்ளம் தனை நாடும் வெள்ளம் போல் - வள்ளலே
நம்பிக்கையோடு நாடினேன் நீ எனக்கு
தும்பிக்கையோடு துணை வா

மதி நதியைச் சடையினிலே சுமக்க வைத்தாய்
மங்கையுடன் சூதாடி தோற்க வைத்தாய்
பொதி மாடு தனிலேறி அலைய வைத்தாய்
புலித்தோலை உடையெனவே உடுத்துவித்தாய்
நிதியில்லாப் பிட்டுக்கு மண் சுமக்க வைத்தாய்
நீள் பிரம்பால் முதுகினிலே அடி படவும் வைத்தாய்
கதியின்றி ஒரு காலில் நிற்க வைத்தாய்
கண்ணப்பன் காற்செருப்பாலுதை படவும் வைத்தாய்
பதியான சிவன் பட்ட பாடறிவேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.



தாயில்லாப் பிள்ளையாகப் பிறக்க வைத்தாய்
தமையனிடம் மாங்கனிக்காய் தோற்க வைத்தாய்
வாய் பேசா ஊமையாக இருக்க வைத்தாய்
வள்ளியிடம் தேன்தினைமா இரக்க வைத்தாய்
பேயாண்டி கோலத்தில் நிற்க வைத்தாய்
பிரமனது தலைகுட்டிப் பழி சுமக்க வைத்தாய்
வேய்ங்குழலான் மாமனைப்போல் மாடு மேய்க்க வைத்தாய்
விளையாட்டுப் பொம்மையைப் போல் தலையாறு
காலிரண்டாய் ஆக்கி வைத்தாய்
வேலவனைத் தொட்டதினால் விளைந்த வினை நானறிவேன்
எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

மீனாமை பன்றி யெனப் பிறக்க வைத்தாய்
மிதியடியைப் பறித்தெடுத்து கானகத்தில் திரிய வைத்தாய்
கூன் விழுந்த மந்தரையால் முடிதுறக்க வைத்தாய்
கூன் குரங்கை கொன்று வசை சுமக்க வைத்தாய்
மான் துரத்தச் சென்று மனையாளை இழக்க வைத்தாய்
மானமற்றுத் துளசியினை சேர வைத்தாய்
ஆன் கன்று மேய்த்து உறிதிருட வைத்தாய்
ஆலிலையில் பாம்பணையில் படுக்க வைத்தாய்
தூண்பிளந்து மாயவனார் நரசிங்கமான கதை நானறிவேன்
எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

முடிகாண முடியாமல் பொய்யுரைக்க வைத்தாய்
முருகனிடம் குட்டுண்டு சிறைபடவும் வைத்தாய்
குடியிருக்க கோயிலின்றி சபிக்க வைத்தாய்
கோபாலன் உண்டியிலே பிறக்க வைத்தாய்
வடிவில்லா உருப்படைக்க வழி வகுத்தாய்
வாணியினை நாவினிலே சுமக்க வைத்தாய்
முடிகாணா சிவன் தேர்க்கு சாரதியாய் ஆக்கி வைத்தாய்
முகத்துவள் தாடியினை சலந்தரனால் இழுக்க வைத்தாய்
படைப்பவனை நீ படுத்தும் பாடறிவேன் எனைத்தொடதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

குறுமுனிவன் அகத்தியனை குடத்திலே ஜனிக்க வைத்தாய்
கோசிகனை மேனகையின் மையலிலே மயக்கி வைத்தாய்
அறுமுனிவர் அகந்தையினை அடக்கி வைத்தாய்
ஆசையினால் காசிபரை மாயையுடன் புணர வைத்தாய்
உறுதிமிக்க வசிட்டரையும் அக்கினியில் பிறக்க வைத்தாய்
உலகுபுகழ் வியாசயரை செம்படத்தி மகனாக்கி வைத்தாய்
வறுமையிலே குசேலரையும் வாட வைத்தாய்
வான்மீகி முனிவரையும் புற்றினுள்ளே முடக்கி வைத்தாய்
வியாக்கரர் பதஞ்சலியை புலிபாம்பாக்கி வைத்த கதை
நானறிவேன் எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

உழுசாலுள் சீதையினைக் கிடக்க வைத்தாய்
உதிட்டிரனை புழு நாயைச் சுமக்க வைத்தாய்
கழுவினிலே மாண்டவியை குத்தி வைத்தாய்
கருடனையும் அடிமையென ஆக்கி வைத்தாய்
மழுவாலே கோவலனை வெட்டுவித்தாய்
மகிடனையும் சண்டிகையால் குத்து வித்தாய்
அழுகுணியை பத்தினியாள் சுமக்க வைத்தாய்
ஆதவனைப் புலராமல் சபிக்க வைத்தாய்
தொழுவாருக் கருள் புரிவாய் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

மூவருடன் நால்வரையும் முனிவர் சித்தர்
முடிமன்னர் அவுணர் அரக்கர் கந்தருபர்
தேவருடன் மானிடர்கள் நாகர் இயக்கர்
பறப்பனவும் நடப்பனவும் நீந்துவன ஊர்வன
ஏவரையும் பிடித்திடுவாய் இஸ்டம் போல் ஆட்டி வைப்பாய்
எவராலும் உனைத் தடுக்க இயலாதையா
பாவலர்கள் பணிந்து இறைஞ்சிப் பாடும் போது
பரிவு கொண்டு அவர்க்கிரங்கி அருள்வாய் ஐயா
பூவலஞ்சூழ் சூரியனின் புதல்வா எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே



தருமரையும் பொய்யுரைக்க வைத்து குருவைக் கொன்றாய்
தம்பியினால் கன்னனுயிர் பிரியச் செய்தாய்
கருக் கலைத்து கௌரவரைப் பிறக்க வைத்தாய்
காந்தாரி கண்ணை பொற்றகட்டால் கட்டி வைத்தாய்
துருபதனை தேர்க்காலில் கட்டி இழுக்க வைத்தாய்
துரியனுக்கு தொடையில் அடிப்பித்து சபதம் வென்றாய்
செருமுனையில் சிகண்டியை முன்நிறுத்தி பிதாமகரை கொன்றாய்
செந்தழலில் பிறந்தவளை சிரிக்க வைத்து பூபாரந்தீர்த்தாய்
பொரு தொழிற்கு அரவானை களப்பலியாய் ஊட்டுவித்தாய்
எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

மாடிருக்க வீடிருக்க மனைவி மக்கள் சுற்றமெல்லாம் மகிழ்ந்திருக்க
நாடுவிட்டு நாடு சென்று நாதியற்று நாய்போல அலையச்
செய்வாய்
பாடுபட்டு படித்தெழுதும் பரீட்சையிலே பகையாய் நின்று
போடுகின்ற புள்ளிகளை குறைத்துப் போட்டுப் பொல்லாங்கு
செய்து பிறர் நகைக்க செய்வாய்
ஈடுசெய்ய முடியாத இழப்புகளால் ஓடெடுக்கும் ஓட்டாண்டி
ஆக்குதற்கு
கோடேறி வழக்குரைத்து கோள்சொல்லி தோற்க வைப்பாய்
காடு குகை மேடுபள்ளம் கரந்துறைந்து
கேடுகெட்டு சூடுபட்டு பாடுபட்டு பதைக்க வைப்பாய்
கேடு செய்ய நீ நினைத்தால் உனைக் கெடுப்பார் யாருமுண்டோ
சனியனே காகமேறுந் தம்பிரானே

அங்குமிங்கும் அலையவிட்டு அழிப்பாய் நீயே
அவமானப் படுத்தி தலைகுனிய வைப்பாய் நீயே
கங்குல் பகல் கவலைகளைத் தருவாய் நீயே
கலகங்கள் மூட்டியுயிர் மாய்ப்பாய் நீயே
சங்கடங்கள் சஞ்சலங்கள் தந்து தவிக்க வைப்பாய் நீயே
சலத்தாலே நிலத்தாலே நெருப்பு காற்றால் அழிப்பாய் நீயே

மங்கு சனியாக வந்து மடுப்பாய் நீயே
மாரகனாய் ஏழரையாய் கெடுப்பாய் நீயே
பொங்கு சனியாக வந்து பொலிய வைப்பாய் நீயே
எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

கெடுப்பதிலே முதன்மை பெற்ற கிரகம் நீயே
கீழ்மையுறும் செயல்புரியும் கோளும் நீயே
தடுப்பதிலும் தவறுசெய்ய வைப்பதிலும் தலைவன் நீயே
தருமத்தை தலைகீழாய் தகர்ப்பாய் நீயே
வடுப்பட்டு வசை சுமக்க வைப்பாய் நீயே
வாழ்க்கையினை நரகமாக்கி கெடுப்பாய் நீயே
எடுப்பதிலும் எவருக்கும் மேலான ஈசன் நீயே
எள் நெய்யில் முழுக்காடும் சனியன் நீயே
கொடுக்கின்ற கொடையினிலே கொடுமுடியாம் கோளும் நீயே
எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

கரு நிறத்தாய் சிறுவுருவாய் காகமேறும் சனியே போற்றி
கருநிறத்து இரத்தினத்தில் நரம்புகளில் உறைகின்ற
காரிபோற்றி
கரு நிறத்து துகில் அணியும் கதிர் மகவே போற்றி
கரு நிறத்து எள் எரித்தால் மகிழ்கின்ற நீலா போற்றி
கருங்காலிப் புகைமுகக்கும் முடவா போற்றி
கருங்குவளை மலர் உவக்கும் சௌரி போற்றி
கருமிருட்டில் வலிமை பெறும் முதுமகனே போற்றி
கரும்பொன்னின் அதிபதியே பிணி முகனே போற்றி
கருது பிற மொழியூட்டும் மேற்கோள் போற்றி
கருது வன்னி அறுகுவக்கும் மந்தா போற்றி.



## திருவருள் நூல் வெளியீட்டுக் குழு
## உறுப்பினர்கள்

| பெயர் | முகவரி | |
|---|---|---|
| செல்வி. அபிலைஷினி - ஜ | களுதாவளை - 01, | T.P. 065 - 2250105 |
| திரு. அரசரெத்தினம் - சி | களுதாவளை - 01, | T.P. 065 - 2222424 |
| திரு. அருளானந்தராசா - இ | களுதாவளை - 02, | T.P. 065 - 2250600 |
| திரு. அழகரெத்தினம் - த | களுதாவளை - 01, | T.P. 065 - 2223312 |
| திருமதி. அன்னபூரணம் - பே | கல்முனை | T.P. 067 - 2229732 |
| திரு. உதயகுமார் - ந | களுதாவளை - 02, | T.P. 065 - 2250055 (S.P.O.) |
| திருமதி.கமலேஸ்வரி - அ | மட்டக்களப்பு | T.P. 065 - 2226302 |
| திரு. கந்தப்பன் - கு | களுதாவளை - 01, | T.P. 077 9050955 |
| திரு. கிருஸ்ணவேல் - நா | மட்டக்களப்பு | T.P. 065 - 2222384 |
| திரு. குலசேகரம் - சி | களுதாவளை - 01, | T.P. 065 - 2250306 |
| திரு. சரவணபவன் - ச | களுதாவளை - 02, | T.P. 065 - 2224017 |
| திரு. சற்குணம் - த | களுதாவளை - 02, | T.P. 077 8822443 |
| செல்வி. சுகன்னியா - ச | களுதாவளை - 01, | T.P. 0779059929 |
| திரு. சுந்தரலிங்கம் - க | களுதாவளை - 02, | T.P. 065 - 2250716 |
| திரு. சுரேஸ் - சு | நற்பிட்டிமுனை | T.P. 065 - 2229934 |
| திரு. திசவீரசிங்கம் - ஆ | களுதாவளை - 01, | T.P. 065 - 2250306 |
| திரு. நல்லையா - இ | களுதாவளை - 04, | T.P. 065 - 2224446 |
| திரு. புவியேந்திரன் - சீ | களுதாவளை - 01, | T.P. 065 - 2247014 |
| திரு. புவேந்திரன் - மா | பெரியபோரதீவு | T.P. 065 - 22424207 |
| செல்வன். புலோசனன் - ச. | களுதாவளை - 01, | T.P. 065 - 2250680 |
| திரு. மகேந்திரன் - ச | களுதாவளை - 01, | T.P. 0788723561 |
| திருமதி. மகேஸ்பரி - த | செட்டிபாளையம், | T.P. 065 - 2250306 |
| திரு. யோகநாதன் - ஞா | களுதாவளை - 04, | T.P. 065 - 2250674 |
| திருமதி. வனிதா - சு | களுதாவளை - 01, | T.P. 065 - 2250306 |
| திரு. வெள்ளக்குட்டி - கு | செட்டிபாளையம், | T.P. 065 - 2250319 |

**குறிப்பு** : அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் அகரவரிசைப்படி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## *நன்றி நவில்கின்றோம்*

இந்நூல்வெளிவரு[illegible]ற்கு ஆலோசனை, ஆதரவு, நிதிய[illegible]வி கை[illegible]யழுத்துப்பிரதியாக்கம், [illegible]ரதியாக்கம், [illegible]செயமைப்பு, குரலி[illegible]ம என்பனவாய் பல்வேறு உதவிகளை வழங்கி [illegible]ந்து சத்தியாக இ[illegible]த அனைவருக்கும் திருவருள் நூல் வெளியீட்டுக் குழுவினரின் மனமா[illegible]த நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

*நன்றி*

09.06.2005

திருவருள் நூல் வெளியீட்டுக் [illegible]

உ

சிவமயம்

மட்/களுதாவளை

சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய

# வருடாந்த விழாக்களும், விரதங்களும்

- புதுவருடப் பிறப்பு (சித்திரை)
  (சங்காபிசேகம் 1008)
- திருநாவுக்கரசு நாயனார் குருபூசை (சித்திரை சதயம்)
- கும்பாபிசேக நினைவு தினம் (வைகாசி அத்தம்)
  (சங்காபிசேகம் 1008)
- திருஞான சம்பந்தர் குருபூசை (வைகாசி மூலம்)
- மாணிக்கவாசகர் குருபூசை (ஆனி மகம்)
- வருடாந்த அலங்கார தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்)
- சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை (ஆடி சுவாதி)
- விநாயகர் சதுர்த்தி விரதம் (ஆவணி – சதுர்த்தி)
- சனீஸ்வரர் ஹோமம் (புரட்டாதி – சனி)
- கேதார கௌரி விரதம் (ஐப்பசி)
- கார்த்திகை சர்வாலய தீபம் (கார்த்திகை)
- விநாயகர் சட்டி விரதம் (காப்பறுப்பு தீர்த்தம்)
- திருவெம்பாவை திருவாதிரை தீர்த்தம்
  (மார்கழி – திருவாதிரை)
- தைப்பொங்கல் (தை)
- மகா சிவராத்திரி விரதம் (மாசி)
- கல்லடிப்பிள்ளையார் ஆலய விசேட அபிசேகம்
  (பங்குனி – உத்தரம்)

மட்/களுதாவளை
சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்
T.P. 065 - 2250625